www.Padasalai.Net www.CBSEtips.in

# இரண்டாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு - 2019

## ஏழாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம்: 2.00 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 60

### பிரிவு - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** 15 x 1 = 15

1. வேயாமாடம் எனப்படுவது ________.
   அ) வைக்கோலால் வேயப்படுவது ஆ) சாந்தினால் பூசப்படுவது
   இ) ஓலையால் வேயப்படுவது ஈ) துணியால் மூடப்படுவது
2. 'பெருங்கடல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) பெரு + கடல் ஆ) பெருமை + கடல் இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல்
3. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ________.
   அ) சுக்கான் ஆ) நங்கூரம் இ) கண்ணடை ஈ) சமுக்கு
4. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் ________.
   அ) இயற்சொல் ஆ) திரிசொல் இ) திசைச்சொல் ஈ) வடசொல்
5. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) ஏடெடு + தேன் ஆ) ஏட்டு + எடுத்தேன் இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ + டெடுத்தேன்
6. இவை + எல்லாம் என்பதை சேர்த்து எழுதக் கிடைப்பது ________.
   அ) இவைஎல்லாம் ஆ) இவையெல்லாம் இ) இதுயெல்லாம் ஈ) இவயெல்லாம்
7. 'வார்ப்பு + எனில்' என்பதை சேர்த்து எழுதக் கிடைப்பது ________.
   அ) வார்ப்பெனில் ஆ) வார்ப்பினில் இ) வார்ப்பெனில் ஈ) வார்ப்பு எனில்
8. குகை ஓவியங்களில் வண்ணம் தீட்டப் பயன்பட பொருள்களில் ஒன்று ________.
   அ) மண் துகள் ஆ) நீர் வண்ணம் இ) எண்ணெய் வண்ணம் ஈ) கரிகோல்
9. 'வண் கீரை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.
   அ) வண் + கீரை ஆ) வண்ணம் + கீரை இ) வளம் + கீரை ஈ) வண் + கீரை
10. பெயர்ப்பகுபதம் ________ வகைப்படும்.
    அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) எட்டு
11. அன்னை தான் பெற்ற ________ சிரிப்பில் மகிழ்ச்சி அடைகிறார்.
    அ) தங்கையின் ஆ) தம்பியின் இ) மழலையின் ஈ) கணவனின்
12. பின்வருவனவற்றுள் விகுதி பெற்ற தொழிற்பெயர் என்ன?
    அ) எழுது ஆ) பாடு இ) படித்தல் ஈ) நடி

**II. எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக:**

13. தோழன் x
14. இளைஞர் x
15. பெண் x

### பிரிவு - ஆ

**III. ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி:** 6 x 2 = 12

16. மரக் கலங்களைத் துறை நோக்கி அழைப்பது எது?
17. தோணி என்னும் சொல்லின் பெயர்க் காரணத்தைக் கூறுக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



18. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களை எழுதுக.
19. பாரதிதாசன் - நூல் வெளி தருக.
20. கல்விச் செல்வத்தின் இயல்புகளாக நாலடியார் கூறும் செய்திகள் யாது?
21. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
22. ஒரு கலை எப்பொழுது உயிர்ப்புடையதாக அமையும்?
23. கீரைபாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்திருக்கின்றன?

**IV. அடிபிறழாமல் எழுதுக:** 4 = 6

24. 'இடும்பைக்கு' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
25. 'வானம் ஊன்றிய' எனத் தொடங்கும் கலங்கரை விளக்கப் பாடலை எழுதுக.

**V. பின்வரும் சிறு வினாக்களுக்கு இரண்டுக்கு மட்டும் விடையளி:** 2 x 5 = 10

26. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது?
27. 'இன்பத்தமிழ்க் கல்வி' பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.
28. சிற்பங்களும் ஓவியங்களும் எவ்வாறு அமைய வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?
29. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து நீங்கள் அறிந்து கொண்டவற்றை எழுதுக.

**VI. பின்வரும் இலக்கண வினாக்களுக்கு எவையேனும் மூன்றுக்கு மட்டும் விடையளி:** 3 x 2 = 6

30. இயற்சொல்லின் நான்கு வகைகள் யாவை?
31. ஓரெழுத்து ஒரு மொழி என்றால் என்ன?
32. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
33. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.

**VII. துணைப்பாட வினாக்களுள் எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:** 1 x 4 = 4

34. மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.
35. நீங்கள் சுற்றுலா வழிகாட்டியாக இருந்தால், சுற்றுலாக் கையேடு என்னும் பகுதியில் உள்ள இடங்களைப் பார்வையிட வருபவர்களுக்கு எவ்வாறு விளக்கிக் கூறுவீர்கள்?

**VIII. கீழ்க்காணும் கட்டுரை வினாக்களுக்கு எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி:** 1 x 5 = 5

36. பயணங்கள் பல வகை
37. உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத் தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**IX. ஏதேனும் ஒன்றனுக்கு கலைச்சொல் எழுதுக: (ஆங்கிலத்தில்)** 1 x 2 = 2

38. குழந்தைத் தொழிலாளர் (அல்லது) ஒழுக்கம்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com